20 காசு

காஞ்சி

நிறுவனர்:

1-6-69



ஏன் பிரிந்தாய்? எங்குற்றாய்!

—புலவர் தோழப்பன்—

அன்னைத் தமிழீன்ற அன்புத் தலைமகனே!
கன்னித் தமிழ்வளர்த்த காவலனே! முத்தமிழின்
மொத்தத் திருவுருவே! மூதறிஞ! முப்புறமும்
கத்தும் கடல்முத்தே! கற்கண்டே! தென்மலையின்
தென்றல் இளங்காற்றே! தேன்சுவையே! சந்தனமே!
தெங்கின் இளநீரே! தீஞ்சுவையே! தேன்மலரே!
காஞ்சி பிறந்துலகில் சீர்பெற்றுத் தம்பிகளின்
வாஞ்சை மிகக்கொண்ட வண்ணத் தமிழ்மகனே!
பாரதிரத் தோன்றிப் புகழ்கொண்ட பண்பாளா!
பார்சிரிக்கப் பார்த்தவனே! பாரழவே ஏன்பிரிந்தாய்?
தாங்கும் இதயம் எதையுந்தான் தாங்கிடவும்
ஏங்கும் இதயத்தைத் தந்தவனே! ஏன்சென்றாய்?
எப்படித்தான் உன்பிரிவை எவ்வாறு தாங்குவது?
எப்படியும் தாங்கிடவே எக்குறையைச் செய்தாய்நீ
நாக்குத் தமிழ்விளங்க நானிலத்தில் நீநடந்து
தேக்கு மனங்கொண்டோர் உன்பாதை கண்டாய்நீ
புற்றால் வளர்மூடக் கொள்கையினை நீயழிக்கப்
புற்றும் கொடுநோயே நீகண்ட நற்பரிசா?
புறாக்கும் நின்புகழும் வாழும், வளர்கின்ற
எண்ணத்தால், ஏற்றமிகு சிந்தனையால், கட்டுரையால்
வண்ணத் தமிழ்ப்பேச்சால், ஆங்கிலத்தால், நல்ல
நடிப்பால், எழுத்தால், பகுத்தறிவுக் கொள்கைப்
பிடிப்பால், அறிவால், அருள்திறத்தால், கேளாரும்
வேட்ப மொழிகின்ற சொற்றிறத்தால், பூவுலகில்
கேட்டார் பிணிக்கும் தகையவாய், வாழ்வில்
பெருக்கத்து வேணடும் பணிவென்று, கூறும்
குறளின் இலக்கியமாய், எத்துறையும் உனதுறையாய்
அண்ணா வெனவழைக்க அண்ணாத் துரையானாய்,
மண்ணுலகில் அண்ணாவென் றேத்தாதார் யாருள்ளார்?
அண்ணா அண்ணாவென் றழுகின்றாள் பெற்றவளும்
அன்னைத் தமிழ்த்தாயும் கண்ணீரைக் கொட்டுகிறாள்
ஆளாக்கி விட்டதமிழ்த் தந்தை பெரியாரும்,
தேளாகக் கொட்டி எதிர்த்திட்ட ராசாசி
மாற்றுக் குறையாப் படைக்கஞ்சாத் தம்பிகளும்
வேறுபல கட்சிகளும், மாற்றாரும், எவ்வுயிரும்,
ஆறாக நீருகுத்து அண்ணாவென் றேங்குகின்றார்,
ஈராண்டு ஆட்சி எமனுக்கு வெம்பசியாய்ப்
பாராண்ட மன்னவனே! நிற்கொண்டு போனானோ?
நன்முறையால் ஒருயிரும் கொள்ளாத காலனவன்
உன்னாட்சித் தன்பசியை நீக்காது என்றெண்ணி,
தன்பசியை நீக்குதற்கு உன்னுயிரைக் கொண்டால்தான்
மன்னுயிரை பஞ்சத்தால் வன்முறையால் உண்ணுதற்கு
நன்றே முடியுமென, நல்லறிஞ! இன்னுயிரை
இன்றே குடித்துமகிழ் கொண்டானோ? ஏன்பிரிந்தாய்!
விண்மீன்கள் அத்தனையும் ஒன்றாகச் சேர்ந்தாலும்
வெண்ணிலவைக் காண்பதில்லை, ஆகையினால் உன்தம்பி
கோடானு கோடியுயிர் கொள்வதனாலேது பயன்?
நாடாளும் மன்னவனே! அண்ணாவே! உன்னுயிர்க்கு
ஒப்பாமோ? அத்தனையும் என்றெண்ணிக் காலனவன்
தப்பாமல் அண்ணாவுன் ஆவிதனைக் கொண்டானோ?
போராடிப் போராடி வாழ்க்கையிலே முன்னேறிப்
போராடிக் காலனிடம் போய்ச்சேர்ந்த எம்மண்ணா!
புன்முறுவல் உன்முறுவல், மக்களுக்குப் பொன்முறுவல்,
நன்முறுவல் நாங்களினி எங்கேதான் காண்பதுவோ?
ஒண்முகத்தைப் பார்வைப் பனிமுகத்தை, மாத்தமிழை
நன்றாடும் நற்றமிழும் வாழ்ந்திட்ட உள்ளமதை
எங்கேதான் கண்டிடுவோம், எப்படித்தான்
காண்போம்யாம்,
மக்களுக்குத் தாயானாய், தந்தையுமாய் நீதிபதி
எங்களுக்கும் நீயானாய், நல்லுயிரும் ஆனாய்நீ
உள்ளச் சிலையாய், ஒளியாய், உண்மையுமாய்,
கண்ணின் மணியானாய், காட்சிக்கும் நீயானாய்,
எண்ணத்தில், ரத்தத்தில், எவ்வுயிரும் ஆனாய்நீ
மூன்றெழுத்துப் பேரின் புகழானாய், முக்கனியாய்,
முத்தமிழாய், மூவேந்தின் முக்கொடியாய், மும்முரசாய்,
முப்பாலாய் முச்சங்கத் தண்டமிழாய், "அண்ணா" நன்
மூன்றெழுத்தைக் கொண்டவனே! மூன்றுபெருங்
காரியத்தை
ஆன்றோர்கள் போற்றிடவே, நீசெய்தாய், ஆதலினால்
நாடு 'தமிழ்நாடு' பேர்வேண்டிச் செத்தவராம்
நாடும் தமிழ்மகனும் சங்கர லிங்கனார்
உள்ளம் மகிழ்வெய்த சொல்லுதற்குத் தான்பிரிந்து
அண்ணாநீ சென்றாயோ? அன்னைத் தமிழ்காக்க
மண்ணுலகில் தன்னுடலில் தீவைத்துச் செத்தவனாம்
சின்னசாமி உள்ளம் குளிரத்தான் இந்திக்கு
என்றைக்கும் நாட்டில் இடமில்லை என்றுரைக்க
அண்ணாநீ சென்றாயோ? ஏழைக்கும் வாழ்வு
மதுவிலக்குக் கொள்கையிலே நீமட்டும் மாறாப்
புதுச்செய்தி சொல்லுதற்குக் காந்தியிடம் சென்றாயோ!
ஏன்சென்றாய்! எங்குற்றாய்! ஏனண்ணா ஏன்பிரிந்தாய்!
நின்பணியும் பேருலகில் நன்றே முடிந்ததென
மன்னுலகை நீவிட்டுப் போயினையோ வேறுலகம்
தேவமொழி தான்சிறப்பு என்பவர்கள் மத்தியிலே
பூவழகுச் செந்தமிழின் சீர்காட்டச் சென்றனையோ!
எத்தனையோ தம்பிகளை இங்குவிட்டு நீமட்டும்
எங்குசென்றாய்! எங்களையும் நீயழைப்பாய், நீயின்றி
எங்களுக்கு இங்கென்ன வேலையுண்டு சொல்லிடுவாய்!
இல்லையெனில் வந்து பிறந்துலகை வாழ்விப்பாய்,
எனக்கு மகனாக நீபிறக்க வேண்டுமென்று
தனக்குள் மகிழ்கின்ற எத்தனையோ தாய்வயிறு!
எவ்வயிறும் உன்வயிறே! அவ்வயிற்றில் நீமகிழ்ந்து
செவ்வையுடன் வந்துதித்துச் சேர்!

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 5 | 1—6—69 | இதழ் 46

தொழில் துறையில் உறவு

தொழிலாளர்—தொழிலதிபர் உறவு முறைபற்றிய கருத்தரங்கம் ஒன்றைத் தொடங்கிவைத்து, தற்காலிகக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் அறிவித்திருக்கும் கருத்து ஆழமான பரிசீலனைக்குரியதாகும்.

"நல்ல தொழில் உறவுகள், தொழில் துறை அமைதியின் பராமரிப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம், சமீபகாலத்தில் மேலும் அதிகரித்திருக்கிறது.

தொழிலாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் இடையே சுமுக உறவுகளையும், ஒத்துழைப்பையும் விரிவுபடுத்துவதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன. ஒரு தொழில் துறையில் இவர்களுக்கிடையேயான உறவு முறையில் மனிதாபிமான அம்சம் எந்த அளவுக்குப் பாதுகாக்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு ஒத்துழைப்பும், சுமுக உறவும் அமைந்திருக்கும்.

செய்பொருள்களின் தரத்தையும் அளவையும் உயர்த்தும் பொருட்டு திறமையான ஊழியம் செய்யாவிடில், தொழில்துறையின் லாபத்தில் மேலும் அதிக பங்குக்காக எப்போதும் கலவரங்களில் ஈடுபட முடியாது என்பதனைத் தொழிலாளர்கள் உணர்ந்து வருகிறார்கள்.

இப்படிச் செய்தால்தான் தொழிலாளர்களுக்குத் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவோ, பொருளாதர சுபிட்ச நிலையை உயர்த்தவோ முடியும் என்பதோடு சமூகத்தின் எல்லாப் பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த முடியும்.

தொழில்துறை உறவுகள் மனிதாபிமான உறவுகளுக்கு மேலானவையோ, அவற்றுக்குக் குறைந்தவையோ அல்ல"

என்று விளக்கமளித்திருக்கும் அரியகருத்து, நம்நாட்டுத் தொழில் துறையின்பால் நல்லிணக்கமும் ஒத்துழைப்புமிருக்கவேண்டும் என்று கவலைப்படுவோருக்கு அளப்பரிய மகிழ்வு தரக்கூடியதாகும்.

தொழில்துறை உறவுகள் சீர்குலைவுற்றிருப்பதற்குக் காரணமே அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்களின் பேரால் தொழில் துறையை ஆக்கிரமித்துக்கொண்டிருப்பதுதான் என்று நடுநிலையாளர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவ்வப்போது கருத்தறிவித்துக் கொண்டும் வந்திருக்கிறார்கள்.

அதே வேளையில் இதற்கான முழுப் பொறுப்பையும் அரசியல் கட்சிகளின்மீதே சுமத்துவதால் பயனேதும் விளைந்துவிடப் போவதில்லை. மத்திய அரசின் பொருளாதாரப் போக்குகளில் காணப்படும் பெருங் குறைபாடுகள்கூட, நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே மனக்கசப்பை ஏற்படுத்தி, பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.

உறவு முறை ஒழுங்காக சீராக செயல்பட்டுக் கொண்டு வருகிற வரையில் பிரச்சினைகள் ஏதும் எழுவதில்லை யென்பதும் உற்பத்திகள் தரங் குறைந்து சீர்கெட்டுப் போவதில்லை யென்பதும், நிர்வாக சீர்குலைவு யேற்பட்டுவிட்ட மாத்திரத்தில், அதன் உற்பத்திகளும் தயாரிப்புக்களும் பாழாக்கப்படுவது என்பதும் அனுபவ வாயிலாக அறிந்திருப்பவையே யாகும்.

அரசின் பொருளாதார குறைபாடு காரணமாக தொழில் பாதிக்கப்படுகிற அதேவேளையில் அதனால் இருசாராருமே பாதிப்புக்காளாகின்றனர் என்பதும் அதில் ஒரு தலையான கண்ணோட்டம் செலுத்துவது நல்ல உறவு முறைக்கு உகந்ததாகாது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தமிழக தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்கள் அறிவித்திருப்பதுபோல ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற நிலைமையேற்படும்போது ஓரளவுக்கு இந்த பிரச்னை தீர வழியேற்படும்.

முழுவதுமாக இந்த உறவு பிரச்னை தொழிலாளர் தரப்பும் சரி, நிர்வாகிகள் தரப்பும் சரி, பரஸ்பரம் விட்டுக்கொடுத்து பிரச்னைகளை யணுகி தீர்வுக்கு வருவதில் அக்கறை காட்டவேண்டும். இதிலே அரசியல் தலையீடு ஏற்பட்டுவிடுகிறபோதுதான் எல்லாமே தலைகீழாக மாறிப்போய் விடுகிறது.

இதுபோன்ற சில பொதுவான கருத்துக்களையும் கவனத்துக்கு எடுத்துக்கொண்டு உறவு பிரச்னைக்குத் தீர்வுகாண முயல்வது வரவேற்கத்தக்கதாகும்.

★

வள்ளுவர் வழி

பொய்யா மொழி, செந்நாப் போதார், மாதானுபங்கி, தமிழ் மறையாளர் என்றெல்லாம் போற்றிப் புகழப்படும் திருவள்ளுவப் பெருந்தகையின் இரண்டாயிரம் ஆண்டு விழா இப்போது தமிழகம் முழுதும் பெருவிழாவாகவே கொண்டாடப்படுகிறது.

வள்ளுவனார் வழங்கிய வாழ்க்கை இலக்கணங்கள் இந்த வையமுற்றுக்கும் பொதுமையானவை என்று உலகம் ஒருமுகமாக ஒப்புக்கொண்டிருப்பதனாலேயே அது 45க்கும் மேற்பட்ட உலக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு ஒழுகப்படுகிறது.

திருக்குறளினைக் கற்ற பின்னரும் ஒருவன் திருந்தாத வாழ்க்கையினை மேற்கொண்டிருக்க முடியுமென்றால், அவனை வள்ளுவரே கூறுகிறபடி மாக்கள் என்ற பட்டியலிலே சேர்ப்பித்துவிட வேண்டியதுதான்!

திருக்குறளிலே இன்னும் எவ்வளவோ ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது. இதற்கான பொறுப்பினை யேற்றுக் கொண்டிருக்கிற தமிழகத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களும் சிறந்த ஆராய்ச்சியினையும், அது மக்கள் இனத்துக்குப் பயன்படத்தக்க விதத்திலும் வடித்துத் தரும் என்று நம்பலாம்.

குறட்பாக்களின் அருமை பற்றி இனிமேல்தான் விளக்கித் தீரவேண்டிய நிலை நல்லகாலமாக இங்கில்லை. அந்த நிலையை மேலும் மேலும் அதிகமாக வளர்த்துக் கொள்ளுவதுதான் இந்த விழாவினைப் பயனுடையதாக்கிக் கொள்வதாகும்.

தம்பி

ஆனால்.........ஆகவே,.........எளிதாகப் பொருள் விளங்கிவிடுகிறது என்று எவரும் கருதிக்கொண்டுள்ளனர்; அன்றாட உரையாடலிலிருந்து பாராளுமன்றப் பேச்சு வரையில் மிகத் தாராளமாகப் பயன்படுத்துகின்றனர் இந்த இரு சொற்களை. ஆனால்......? பார்த்தாயா தம்பி, நாலுவரி முடிவதற்குள் இந்த ஆனால் எனும் சொல் வந்து தொலைக்கிறது, ஆகவே இதிலிருந்து என்ன புரிகிறது?......மீண்டும் பார் தம்பி, ஆனால் எனும் சொல் போலவே. ஆகவே என்ற சொல்லையும் அழைத்துக்கொண்டேன். அந்த அளவுக்கு எவருடைய பேச்சிலும் எழுத்திலும், தோழமை கொண்டாடிக்கொண்டு, ஆனால் ஆகவே எனும் இந்த இரு சொற்களும் இடம் பெற்றுவிடுகின்றன,

பேச்சிலும் எழுத்திலும் தோழமை கொண்டாடி இடம் பெற்றுள்ள இந்த இரு சொற்களும் தம்பி, காண்பதற்கு மிக எளிதாகப் பொருள் தரத்தக்கனபோல் இருக்கும். ஆனால், இந்தச் சொற்களிலே புதைந்து நிற்கும் பொருளை விளங்கிக்கொள்வது உண்மையில் எளிதல்ல.

அணு என்ற உடன், ஓஹோ! அணுவா? என்று எப்படி எவரும் மிகமிகச் சாதாரணமாகக் கூறிவிடுவதன் மூலம், அணு குறித்து அனைவரும் அறிந்துகொண்டுள்ளனர், அத்துணை எளிது, அதன் தன்மையை அறிதல் என்று எண்ணும்படிச் செய்துவிடுகிறார்களோ, அதுபோன்றே இந்த ஆனால், ஆகவே எனும் இரு சொற்கள் குறித்தும், ஒரு போக்கு காட்டப்பட்டு வருகிறது.

அது மட்டுமல்ல, இந்த ஆனால், ஆகவே எனும் இரு சொற்களையும், 'அசை'க்குப் பதிலாகப் பயன்படுத்துவோரும் நிரம்ப உள்ளனர்!

ஏதேது, அண்ணா! தமிழ் இலக்கணம் பேசுவது போன்ற போக்கு கொண்டு, தமிழ் ஆசிரியர்களின் 'ஓட்டுகளை'ப் பறிக்க முயலுகிறாயா? என்று, தம்பி நீ கேட்கமாட்டாய்—என்னிடமும் உன்னிடமும் கடுப்புள்ளவர் பேச்சல்லவா, அது.

நான், தமிழ் இலக்கணம் குறித்து அல்ல இதனை எழுதுவது—எனது இரு தமிழ்ப் பேராசிரியர்களும்—மணி. திருநாவுக்கரசு, மோசூர். கந்தசாமியார், இருவரும் வெகு பாடு பட்டனர், எனக்கு இலக்கணம் கற்பிக்க. நான் தமிழின் இனிமைபற்றி மட்டுமே அறிந்து கொள்ள முடிந்தது, இலக்கணப் பயிற்சியில் என்னை வெற்றி பெறச் செய்வதிலே, எனது இரு ஆசிரியர்களும் வெற்றி பெறவில்லை. ஆகவே......... பார், பார் தம்பி, மீண்டும் அந்த ஆகவே வந்து ஒட்டிக்கொள்கிறது! அடா, அடா, இந்த இரு சொற்களும் பொதுவாழ்வுத் துறையினரின் நாவிலே இருந்துகொண்டு, அவர்களையும் அவர்களிடம் தொடர்புகொண்ட பொதுமக்களையும், படுத்தும் பாடு இருக்கிறதே, தம்பி சொல்லுந்தரத்ததல்ல.

ஆனால்...ஆகவே...!

ஒரு பிரச்சினையை விளக்கிக்கொண்டே போகிறார் ஒரு தலைவர் என்று வைத்துக்கொள்—ஏன் வைத்துக்கொள் என்று தயவாகக் கேட்டுக்கொள்கிறேன் என்றால் இப்

நேருவும் பேசினார்! நிலையில் பிறழ்ந்தார்!

போதெல்லாம் பிரச்சினைகள் விளக்கப்படுவதில்லை, புகுத்தப்படுகின்றன, புதிராக்கப்படுகின்றன! எல்லாத் தலைவர்களுமா அவ்விதம் என்றால், தம்பி, பெரும்பாலோர் இம்முறையைத்தான் கையாள்கிறார்கள்—வேறு சிலர், நல்ல விளக்கம் தருகிறார்கள். ஆனால் பிரச்சினைகளுக்கு அல்ல—இந்த நிலைமை இருப்பதனால் தான் பிரச்சினையை விளக்குவதாக வைத்துக்கொள் என்று தயவு கோரும் தன்மையில் கேட்டுக்கொண்டேன—இனிக் கேள், பிரச்சினையை விளக்கியானதும், ஆனால், அல்லது ஆகவே எனும் இரு சொற்களும் துள்ளிக் குதித்துவந்து நிற்கின்றன—அந்தத் தலைவர், இந்த இரு சொற்களிலே, எதனைத் தன் பேச்சுக்கும், அதை அடுத்துத் தன் செயலுக்கும் துணையாகக் கொள்கிறாரோ, அதைப் பொறுத்துத்தான், சமுதாயத்துக்குக் கிடைக்கும் பலன் இருக்கிறது. இதைச் சொல்லத்தான்' நான் இலக்கணப் பாடம் போன்ற முறை துவக்கினேன்—இலக்கணம் போதிக்க அல்ல.

நமது நாட்டிலே, இந்த இரு சொற்களுக்கிடையே கடுமையான போட்டி—தலைவர்கள் திணறும்படியான நிலை ஏற்பட்டுவிடுகிறது — கடைசியில் அவர்கள், ஆனால் போடவேண்டிய கட்டத்தில் ஆகவேயையும், ஆகவே என்று கூறவேண்டிய கட்டத்தில் ஆனால் என்று கூறியும், பிரச்சினைகளைப் பாழடித்து விடுவதைத் தான் பெரிதும் காணுகிறோம்.

நம் நாட்டிலேயே பல பிரச்சினைகளுக்கு, எத்துணையோ முயற்சிக்குப் பிறகும், தக்கதோர் பரிகாரம் கிடைக்காமற் போனதற்குக் காரணம், இந்த ஆனால், ஆகவே எனும் இரு சொற்களும், தலைக்குப் போட வேண்டியதைக் காலுக்கும் காலுக்குப் போடவேண்டியதைத் தலைக்கும போட்டுக்கொள்ளும் அலங்கோலம் போலப் பயன்படுத்தப்பட்டு விடுவதுதான் என்பதை பல்வேறு அரசியல் சம்பவங்களையும் ஆய்ந்தறிந்தால் அறிந்துகொள்ளலாம்.

பொதுவாகக் கவனிக்கும்போது ஒரு உண்மை புலப்படும்; ஆனால்... என்ற சொல், இழுப்பு, வழுக்கல், திகைப்பு, திணறல், அச்சம், தயை, தாட்சணியம் போன்ற மனப்போக்கின் விளைவாக முளைப்பதையும், ஆகவே எனும் சொல், உறுதிப்பாடு செயல்படு திறன், எழுச்சி, முயற்சி போன்ற போக்கிலே மலர்வதையும் உணரலாம், பெரிதும்.

எழுச்சி கொண்டோர்போல நடித்துவிட்டு, பிறகு வழுக்க விரும்புவோர், பிரச்சினைபற்றி பேசிக்கொண்டே வரும்போது; சரி சரி, பிரச்னையைக் காரசாரமும் வீர தீரமும் ததும்பும் வகையில் விளக்குகிறார் இந்தத் தலைவர், ஆகவே இந்த அக்ரமத்தை ஒழிக்க வேண்டும் என்று முழக்கமிடப் போகிறார், செயல் திட்டம் தரப்போகிறார் என்று கேட்போர் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு இருப்பர். ஆகவே என்று சொல்வதற்குப் பதிலாக அந்த அருந் தலைவர் ஆனால் என்று இணைப்புப் போட்டு, இழுப்புப் பேச்சில் இறங்கி, வழுக்கி விழுந்து, தமது அச்சத்தையோ, அல்லது தயவு தாட்சணியத்துக்குக் கட்டுப்பட்டுவிட்ட தன்மையையோ காட்டிக்கொண்டு விடுவார்.

இதோ ஓர் எடுத்துக்காட்டு—

"நமது திட்டம் சமதர்மம், சமதர்மம்தான் நீதியையும் நேர்மையையும் அடிப்படையாகக் கொண்டது.

சமதர்ம திட்டத்தைத்தான் மக்களாட்சியின் மாண்பறிந்த நாடுகளெல்லாம் ஏற்றுக்கொண்டுள்ளன.

பாரதமும் சமதர்ம திட்டத்தை ஆவடி காங்கிரசின்போதே ஏற்றுக்கொண்டு விட்டது."

நேரு பண்டிதர், தமது ஆட்சியின் குறிக்கோள் யாது என்ற பிரச்சினையை இவ்விதம் விளக்குகிறார். மாம்பழத்தை தோலைப் பதமாகச் சீவி எடுத்துவிட்டு சிறு சிறு துண்டுகளாக நறுக்கிவைக்கிறார் மாம்பழத் துண்டு கிடைக்கப் போகிறது, சுவை பெறப் போகிறோம் என்று தானே எவருக்கும் தோன்றும், கிடைக்கிறதா என்று பார், தம்பி.

பிரச்சினையை இந்த ஆர்வத்துடன் நேரு பண்டிதர் விளக்கிக்கொண்டு செல்வது கண்டு என்ன எண்ணிக்கொள்வோம்.

விளக்கத்தின் இறுதியில் ஆகவே என்று வீரச் சொல் தந்து,

ஆகவே இந்த நாட்டிலே தொழில்களை முதலாளிகளிடம் விட்டுவைக்கப் போவதில்லை. கொள்ளை இலாபக்காரனை விட்டுவைக்க மாட்டோம்.

உழைப்பவனை வாட்டி வதைத்து ஒரு சிலர் உல்லாச வாழ்வு நடத்துவதற்கு அனுமதிக்க மாட்டோம்.

என்றெல்லாம் நேரு பேசப் போகிறார். ஆர்வம் கொந்தளிக்கும்; வீரம் வீறிட்டெழும் என்றுதானே எண்ணிக் கொள்வோம். அவரோ, பிரச்சினையை விளக்குவதிலே விவேகம் காட்டிவிட்டு, இறுதியாக உறுதிப்பாட்டைக் குறித்திடும் கட்டம் வந்ததும், ஆகவே என்ற சொல்லை, மெல்லச் சிரமப்பட்டுத் தள்ளிவிட்டு ஆனால் எனும் இழுப்புச் சொல்லினை இழுத்தணைத்தபடி

ஆனால் சமதர்மம் வெற்றி பெறுவதற்கு முதலாளிகளை ஒழித்தாக வேண்டும் என்பதில்லை.

தொழில்கள் தனிப்பட்ட முதலாளியிடம் இருக்கக்கூடாது என்று சட்டம் போடத் தேவையில்லை.

இலாபம் தேடுவோரைத் தடுக்கவேண்டும் என்பதில்லை

என்றெல்லாம் பேசுகிறார்.

திகைத்து நிற்கிறோம், திணறிப் போகிறோம், சமதர்ம திட்டமே, திக்குத் தெரியாத காட்டிலே விடப்பட்ட சிறகொடிந்த பறவை போலாகி விடுகிறது.

தம்பி, இந்தக் கட்டத்தில் மட்டும் ஆனால் என்ற அவலச் சுவை தரும் சொல்லைக் கொள்ளாமல், ஆகவே என்ற சொல்லை இணைத்துத் தம் ஆற்றலைக் காட்டினால் எத்துணை நன்மை கிடைக்கும் என்று எண்ணிப் பார்க்கும்போது ஏக்கம் பிறக்கத்தான் செய்கிறது.

சூயஸ் கால்வாய் எகிப்தின் உடைமை! அதனை நிர்வகிக்கும் உரிமையை எழுச்சி பெற்ற எகிப்து நிலைநாட்டிக் கொண்டு விட்டது—என்ற இந்த விளக்கத்தின் தொடர்ச்சியாக, ஆகவே, ஆனால் எனும் இரு சொற்களில் எது

பெரியார் பேச்சும் புரண்டதே தடம்!

பயன்படுத்தப்படுகிறதோ அதைப் பொறுத்து, இன்றைய உலகப் போக்கே இருப்பதனை எண்ணிப் பார்த்திடும் போது. ஆனால்—ஆகவே எனும் இரு சொற்களும் வடிவில் சிறியன. மகத்தான வலிவுடையன என்பதை அறிந்து கொள்ளலாம்.

சூயஸ் வரையிலே செல்வானேன், தம்பி, நமது குடும்ப விவகாரம் போதுமே. பெரியாரின் திருமணப் பிரச்சினை கிளம்பியபோது ஆனால் போட்டவர்கள் ஒரு சிலர். ஆகவே போட்டவர்கள் ஒரு சாரார்—திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் எனும் இரு வடிவமே அல்லவா ஏற்பட்டுவிட்டன!

தம்பி, சாமான்யமான சொற்களல்ல, இந்த. ஆனால் ஆகவே—என்பவைகள். மிகப் பொல்லாதன!!

தேவிகுளம் பீர்மேடு பிரச்சினையின்போது அவை தமிழருக்கு உரியன என்பதற்கான காரணங்களை, வரலாற்று ஆதாரங்கள், புள்ளி விவரங்கள் ஆகியவற்றினைத் துணைகொண்டு நிதியமைச்சர் சுப்பிரமணியம் நேர்த்தியாகப் பேசினார், சட்டசபையில்—தேவிகுளம் இழந்தோம்—காரணம் என்ன?—இவ்வளவு பேசியவர். ஆகவே என்று ஆர்த்தெழவில்லை, ஆனால் என்று ஆமையானார். சிறிது நாட்களிலே, அந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் ஊமையுமானார்.

ஆகவே என்ற சொல் கொலுவிருக்க வேண்டிய கட்டத்தில், ஆனால் எனும் சொல் குடிபுகுந்தது. காடும் மலையும் கவினுற விளங்கிடும்; தேவிகுளம் பீர்மேடு, நெய்யாற்றங்கரை போன்ற இடங்களை இழந்தோம்.

ஆகவே என்ற சொல்லினை அமைச்சர். அரியாசனத்தில் அமர்த்தியிருந்தால் தேவிகுளம் ஆகிய பகுதிகள் தமிழர்க்குக் கிடைத்திருக்கும்—அமைச்சர் பதவி ஒருக்கால் அவருக்கு இல்லாது போயிருக்கும்!

தமிழர் வாழும் இடம் இது—தமிழரின் தாயகம் ஆகவே தமிழ்நாடு என்றே பெயர் அமைதல் வேண்டும் என்று பெரியாரே கூறினார், அவருடைய பேரன்பைப் பெற்றுப் பெருமிதம் கொண்டுள்ள காமராஜரோ, ஆகவே இதற்குத் தமிழ் நாடு என்று பெயரிடலே பொருத்தமுடைத்து என்று கூறாமல், ஆனால், உலகில் சென்னை என்றால்தான் புரியும், சென்னை ராஜ்யம் என்றே பெயர் இருக்கும் என்று அறிவித்துவிட்டார். தமிழருக்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர் அணியும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

ஆகவே இப்படிப்பட்டவரின் ஆட்சியை ஆதரிப்பது அறமாகாது என்றல்லவா தம்பி! நீ கூறுகிறாய். தமிழ்நாடு என்ற பெயர்கூட வைக்கத்தான் காமராஜர் முன்வரவில்லை. ஆனால் அவர் நல்லவர், நம்மவர், தமிழர் அவர்தான் மீண்டும், மீண்டும் ஆட்சி செய்யவேண்டும் என்றல்லவா பெரியார் சொல்கிறார்.

இதன் பயனாக அரசியல் நிலைமையும், போக்கும், எவ்வளவு எதிர்பாராத முறையில் உருவாகிவிட்டது, உணருகிறாயல்லவா?

பொதுமக்கள் பேசுவதை சற்று உற்றுக் கேட்போம். வா. தம்பி,

பெரியார், தமிழ்நாடு என்றுதான் பெயர் இருக்கவேண்டும் எனகிறார்,

ஆர்வத்தோடு சொல்கிறார்; எழுச்சியூட்டும் முறையில் எடுத்துரைக்கிறார்.

இந்தப் பெயர் கிடைப்பதற்காகப் பெரும் போரே நடத்துவேன் என்று எச்சரித்திருக்கிறார்.

காமராஜரோ. அதெல்லாம் அர்த்தமில்லாத பேச்சு, அனாவசியமான ரகளை, வீணான குழப்பம், சென்னை ராஜ்யம் என்ற பெயர்தான் இருக்கும். ஆமாம், யார் வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் கூச்சல் போடட்டும் என்று பிடிவாதமாகப் பேசுகிறார்.

ஆகவே பெரியார், காமராஜரின் இந்தக் குருட்டுப் போக்கை வன்மையாக எதிர்த்துப் போராடக் கிளம்புவார்—

இப்படித்தானே பொதுமக்கள்—பெரியார், தமிழ்நாடு என்ற பெயர் தேவை என்பதற்கான விளக்கமளித்தபோது பேசிக்கொண்டனர். பிறகோ, காமராஜர் தமிழ்நாடு என்ற பெயர் சூட்டக்கூட ஒப்பாதது கண்டு பரணி பாடினாரோ என்றால். இல்லை

ஆனாலும் காமராஜரை ஆதரிக்கிறார்! ஏன்? ஏன்?

என்று பொதுமக்கள் கேட்கின்றனர்.

இவ்வண்ணம், தம்பி, ஒவ்வோர் பிரச்சினையிலும். இந்த ஆனால், ஆகவே எனும் சொற்கள். வண்ணத்தை. வடிவத்தை, வலிவை, விளைவை, நிலையை, நோக்கை, மாற்றிவிடக் காண்பாய். ஒவ்வொன்றாகவும், ஒவ்வோர் முனையில் நின்றும் எண்ணிப் பார்த்தால், முழுவதையும் காண்பாய்—இல்லையேல், குருடர் கண்ட யானைக் கதையாக முடியும்.

என்னோடு இருந்தார்கள். என்னால் ஆளானார்கள். என் திருமணத்தின்போது விட்டுப் பிரிந்தார்கள், தனிக் கட்சியானார்கள்.

என்ற பேச்சுடன், பெரியார் ஆனால்

திராவிடநாடு பிரச்சினை

பொருளாதாரத் திட்டம்

சமுதாயப் பிரச்சினை

ஆகியவற்றிலே, முன்பு கொண்டிருந்த கருத்தினையே கொண்டு இருக்கிறார்கள்.

தனியாக இருக்கிறார்கள், வேறு கட்சிகளிலே குடிபுகுந்துவிடவில்லை.

என்று மட்டும் சேர்த்துப் பேசுவது என்ற போக்கு இருந்தால் இன்று அவர்,

என்னைவிட்டுப் பிரிந்து போனதுகள், ஆனாலும் என்கொள்கைகளையேகொண்டோராக இருப்பதால், தேர்தலில் ஆதரிக்கிறேன் என்றல்லவா கூறுவார்!

ஆனால்—ஆகவே எனும் இரு சொற்களும், பயன்படுத்தப்பட வேண்டிய முறை தவறிப் போவதால் தாலாட்ட வேண்டியவர்கள் தடிகொண்டு தாக்க வருவதுபோன்ற வேதனை தரும் விசித்திரம் விளைகிறது.

மற்றோர் வேடிக்கை கேள் தம்பி!

வட—நாட்டு நேருவுக்கு நாம் கருப்புக்கொடி காட்

நாட்டுக்களித்தவை நல்லுயிர் அல்லவோ!

டினேமல்லவா? நையப் புடைத்தார்!! சிறையில் போட்டுச் சிதைத்தார்கள்!!

இதைக் கண்டோர் கண்கலங்கினர்.

இது குறித்துப் பேசினோர், பரிதாபப்பட்டனர்.

> தி. மு. க.க்களின் திட்டம் எங்களுக்குப் பிடிக்காது ஆனால் அவர்கள்மீது சர்க்கார் ஏவிய அடக்குமுறையைக் கண்டிக்கிறோம்.

என்று நம்மோடு நேசமற்ற ஏடுகளும் எழுதின.

> இதுகள் என்னைவிட்டுப் பிரிந்துபோய் தனிக்கட்சி வைத்துக்கொண்டன. ஆனால் பாவம், வடநாட்டு எதிர்ப்பு உணர்ச்சியைக் கைவிடவில்லை; நேருவுக்குக் கருப்புக்கொடி காட்டும் அளவுக்கு ஆர்வமும் ஆற்றலும் காட்டினர்; மகிழ்கிறேன்; அவர்களைப் போலீஸ் காட்டுமிராண்டித் தனமாக அடித்தனர்; கண்டிக்கிறேன்,

இதுபோல் பெரியார் கூறும் போக்கிலே இருந்தால், பாசம் பால்போல் பொங்குமல்லவா! இப்படித்தான் பேசுவது முறை என்றுதானே பகைவரும் கூறுவர்! கட்சியிலிருந்து, பிரிந்து போனார்கள். ஆனால் கடுமையான அடக்கு முறைக்கு ஆளானார்கள், என்று பச்சாதாபம் காட்டத்தானே வேண்டும்.

அந்தச் சம்பவத்தின்போது ஆனால் போட்டுத்தான் பெரியார் பேசினார், எழுதினார். எப்படி? நம்மிடம் பச்சாதாபம் காட்டும் முறையில்!

அடக்கு முறையைக் கண்டிக்க கடற்கரையில் கூட்டம்கூட நடத்தினார்.

அந்த 'ஆனால்' அவருடைய அவசரகாலத் திட்டம் என்பது இப்போது அவர் ஆனால் என்னும் பதத்தை வேறு நோக்குடன் பயன்படுத்துவதிலிருந்து தெரிகிறது.

இப்போது பெரியார் பேசுகிறார்.

> நான கொடி கொளுத்து என்றேன்.
>
> சர்க்கார் என்னிடம் நெருங்கவில்லை.
>
> கருப்புக்கொடி பிடித்தோம்; போலீஸ் பாதுகாப்பு கொடுத்தது.
>
> ராமர் படம் கொளுத்தினேன்; ஒருதுளி சர்க்கார் அடக்கு முறையும் கிடையாது.
>
> நீ. நேருவுக்குக் கருப்புக்கொடி காட்டினாய் என்ன செய்தார்கள்?
>
> பூட்ஸ்காலால் உதைத்தார்கள்.
>
> உருட்டி உருட்டித் தள்ளினார்கள்.

என்று பேசியிருக்கிறார்.

நான் கிளர்ச்சி செய்தேன் அடக்குமுறை ஏவவில்லை ஆனால் நீ கருப்புக்கொடி காட்டினாய், உதை உதை என்று உதைத்தார்கள்! என்று பேசுகிறார்.

ஆனால் எனும் சொல் இதற்குப் பயன்பட்டது! ஒருமுறைக்குப் பன்முறை இந்தப் போக்கினை அலசிப்பார், தம்பி தமிழகத்தின் அரசியலே புரியும்!

நம்மோடு சேர்ந்திருப்பவர்களுக்குப் பெரியார் பயமூட்டப் பார்க்கிறார்.

> ஓ! தோழர்களே! அங்கே இருந்தால் உங்களுககு அல்லல், அவதி, அடக்குமுறை தாக்கும்; என்னோடு இருந்தால், துளியும் தொல்லை இல்லை. துரைத்தனம் உங்களைத் தொடாது.
>
> என்ன கிளர்ச்சி செய்தாலும், என்னோடு இருப்பவருக்கு இம்சை நேரிடாது. சந்தேகமிருந்தால், கொடி கொளுத்தும் திட்டம், பிள்ளையார் உடைப்பு, ராமர் எரிப்பு எதை வேண்டுமானாலும் பார். போலீஸ் நம்மை ஏதாவது செய்ததா? அதுகள் கதைதெரியுமா? அதுகள் கருப்புக் கொடி பிடித்தன! உதைத்தார்கள்! உருட்டினார்கள்! சுட்டுத் தள்ளினார்கள்!
>
> ஆகவே அதுகளோடு சேராதே! என்னோடு வா! தொல்லை வராது! துரைத்தனம் தொடாது!

என்று அழைக்கிறார்.

பூட்ஸ் காலால் உதைபட்டோம் — உண்மை. உருட்டி உருட்டித் தள்ளப்பட்டோம், உதை உதை என்று உதைத்தனர்; மறுக்கவில்லை! துப்பாக்கியால் சுட்டனர் — பிணமாயினர் தோழர்கள்! ஆமடா தம்பி, ஆமாம்! மிகமிக நாகரீகமான முறையில், நல்லாட்சியுள்ள எந்த நாட்டிலும் அனுமதிக்கப்படும் கருப்புக் கொடி காட்டும் முறையில் கிளர்ச்சி செய்தோம்— பெரியார் கூறுகிறபடி

> பூட்ஸ் காலால் உதைத்தனர்.
>
> உருட்டி உருட்டித் தள்ளினர்.
>
> உதை உதை என்று உதைத்தனர்.

இல்லை என்று சொல்லவில்லை—இது இழுக்கு என்று பேசும் பெரியாரோடு நாம் இன்று இல்லை,

> உதைப்பான்; பட்டுக்கொள்.
>
> அடிப்பான்; பொறுத்துக்கொள்.
>
> சுடுவான்; தாங்கிக்கொள்.
>
> பத்துபேர் செத்தாலும் கவலைப்படாதே.
>
> செத்தவர் போக மிச்சம் இருப்பவர், மானத்தோடு வாழட்டும்.

இப்படி போதித்த பெரியாருடன் நாம் இருந்தோம்.

அடக்குமுறை, வெறிக்கோலத்தில் துரத்தியபோது, நம் தோழர்கள் கலங்காது நின்றபோது, மனக்கண்ணால் அந்தப் பெரியாரைத்தான் கண்டனர்.

அடிபட்டோம், உதைபட்டோம், என்று கூறிக்கொள்வதிலே, வெட்கமில்லை, பெருமிதத்தோடு கூறுகிறோம், தாயக விடுதலைக்காக இந்த அளவுக்காவது துணிவுபெற முடிந்ததே என்று மகிழ்ச்சியோடு கூறுகிறோம், பெரியார் நம்மோடு இல்லாதிருக்கும் இந்நிலையில் அடக்குமுறை கண்டு அஞ்ச நேரிட்டுவிடுமோ என்று ஐயம் கொண்டிருந்த நாம், இல்லை, அவர் இன்று நம்மோடு இல்லாமற்போகலாம், அவர் ஊட்டிய ஆர்வமும் வீரமும் அஞ்சா நெஞ்சமும் நம்மை விட்டுப் போய் விடவில்லை.

> உதைக்கிறீர்களா? பட்டுக்கொள்கிறோம்!
>
> சுடுகிறீர்களா? தாயகத்தின் தளை

போர்க்குறி காயமே புகழின் காயம்!

உடைத்திடும் பணிக்கு இன்னுயிர் தருகிறேம் என்று கூறினேம்.

இது, என்றென்றும், எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும், நெஞ்சினை நெகிழச் செய்திடும் சம்பவம்.

இது கேலிக்கும் உதவும் என்று யார் எண்ணியிருப்பர்; ஆனல்—ஆகவே எனும் பொல்லாத சொற்களின் போக்கினலே தம்பி, எது கண்டு எவரும் பாராட்டுவரோ அதே கஷ்ட நஷ்டம் ஏற்ற சம்பவத்தையே பெரியார், கேலிபேசப் புயன்படுத்திக்கொள்ளும் விசித்திரம் ஏற்படுகிறது.

தம்பி, பெரியாராவது, தம்மோடு இருந்தால் கிளர்ச்சி, செய்யலாம், சர்க்கார் 'கிச்சுகிச்சு' மூட்டுவரேயன்றி கொட்டமாட்டார்கள், தட்டமாட்டார்கள் என்று ஆசைகாட்டி, அதன் மூலமாக நமது அணிவகுப்பிலேயிருந்து யாரையாவது இழுத்துக்கொள்ளலாமா என்று முயற்சிக்கிருர் என்று வைத்துக் கொள்வோம்; ஆசைக்கு ஆட்படும் போக்கு நம்மிடம் இருந்தால், இதைவிட, காங்கிரஸ் சுவைமிக்க ஆசை காட்டுகிறதே.

பதவி கிடைக்கும் என்று!—அணி வகுப்பிலே, யார் இளித்தவாயராயினர்!

கொள்கைக்காக கொடிய அடக்கு முறைக்கு ஆளாகினர்கள் என்பது புகழின் சின்னமாயிற்றே! இதைக் காட்டியும் கேலிபேச முடிகிறதே!!

அடக்குமுறை கண்டு அஞ்சாமலிருக்கும் மனப்போக்கு, பூண் போட்ட தடியால் அடித்தாலும் பூட்ஸ் காலால் உதைத்தாலும் தாங்கிக் கொள்ளும் வீர உள்ளத்தை, பெரியாரே! எமக்குத் தாரும்!! தாரும்!!—என்று கேட்டுக் கேட்டுப் பெற்றேம்.

இன்று அடிபட்டார்கள், உதைபட்டார்கள், ஆகையால் அங்கே போகாதீர்கள்—நான் நடத்தும் கிளர்ச்சியிலே புகை இருக்கும் நெருப்பு இராது, நெருப்பே தீண்டினலும் சுடாது, சுட்டாலும் புண்ணுகாது; புண்ணனலும் மருந்தில்லாமலே குணமாய்விடும் என்று பேசுவது கேட்டா, தம்பி, நீ நமது கழகத்தை விட்டுச் சென்றுவிடுவாய்! அப்படி நீ கேட்பதே, தவறு அண்ணு! என்று கேட்டிடும் எண்ணற்ற தம்பிமார்களின் கோபப் பார்வையை அல்லவா நான் காண்கிறேன்!

அடிப்பார்கள்! உதைப்பார்கள்! ஆகவே, என்னேடு வாருங்கள்—எந்தக் கிளர்ச்சி செய்தாலும் சர்க்கார், கிட்டேகூட வரமாட்டார்கள் என்று ஆசை காட்டும் பெரியார் ஒரு அரைமணி நேரம் மட்டும்தான் பேசுகிருர் உடனே உண்மைப் பெரியார் முழக்கமிடுகிருர், அதே கூட்டத்தில், 5000 பேர் தூக்குமேடை ஏறச் சித்தமாக இருக்கவேண்டும், தெரிகிறதா!—என்று கூறுகிருர்!

இதிலிருந்து உனக்கு என்ன தம்பி, புரிகிறது! எனக்குத் தலை சுற்றுகிறது!

அங்கே இருந்தால் அடிப்பார்கள், ஆகவே அங்கு இராதே; ஆனல் இங்கே வா, தூக்குமேடை ஏற!!

இதிலே உள்ள ஆகவே ஆனல்—இவைகளின் போக்கு, எப்படி இருக்கிறது, என்பதை ஆர அமர இருந்து எண்ணிப்பார்!

அடிபட்டோரே உதைபட்டோரே! அடக்குமுறைக் கொடுமைக்கு இலக்கானேரே! அவர்கள் எம்மை அடித்தபோது ஏற்பட்ட வேதனையைக்காட்டிலுமன்ரே அதுகுறித்துக் கேலி பேசுவது கேட்டு வேதனை எழுகின்றது. அருந்தொண்டாற்றக் கிளம்பினேரையா அடித்திடக் கிளம்பினீர்! அறிவிலிகாள்! பிரிந்துதார் எனினும் அவரும் எம்மவர் என்பதை மறந்தா நிற்போம! என்று கூறி, களம்வந்து துணைபுரிவர் நல்லோர் அந்த அளவுக்கு மனம் இடம் தராது போயினும், ஐயகோ! அடிக்கின்றனரே, அறியாச் சிறுரை! என்று கூறி கண்ணீர் சிந்தவேனும் இசைவர் இதயம் படைத்தோர். அடித்தனர் உதைத்தனர், உருட்டினர்! என்று கேலியல்லவா செய்கின்றனர்—என்று தோன்றும் தம்பி! இதையும் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்.

போர்க்குறிக் காயமே
புகழின் காயம்
யார்க்கது வாய்க்கும்!
ஆ! ஆ! நோக்குமின்!
அனந்தம் தலைமுறை
வருந்தனி மக்கள்
தினந்தினம் தாம் அனுபவிக்கும்
சுதந்திரம் தந்தது
தம்முனேர் நொந்த
புண்ணெண்ணிச்
சிந்தை அன்புஉருகி
சிந்துவர் கண்ணீர்

என்ருர் மனேன்மணியம் ஆசிரியர்.

புகழின் காயம் பெற்றேம்! மேலும் மேலும் பெறுவதற்கான உள்ள உரம், இத்தகு கேலி மொழிகளால் ஏற்படும். ஆகவே, தம்பி, கவலைப்படுவானேன்!

ஆனல்...ஆகவே எனும் சொற்களின் சிலம்பம் தரும் சுவையான பாடம் கண்டு மகிழத்தான் இதைச் சொல்கிறேனேயல்லாமல், இதிலே குறிப்பிடப் பட்டுள்ள அரசியல் பிரச்சினைகளுக்காக அல்ல.

'இந்த நாட்டை இன்றைய தினம் ஆளுகிறவர்கள் வடநாட்டார்கள்; பணியாக்கள் மார்வாடிகள் குஜராத்திகள் தானே! அவர்கள் இந்த நாட்டை ஆளுவதற்கு உள் உளவாய் இருந்துகொண்டு இருப்பவர்கள் நம நாட்டுப் பார்ப்பனர்கள்; அவர்களுக்குக் கூலியாயிருப்பவர்கள், திராவிட சமுதாயத்தைச் சோந்த சில விபிஷணர்களும், அனுமார்களும் ஆவார்கள்."

பெரியார் பேருரையில் ஓர் பகுதி இது.

ஆகவே, விபீஷணர்களையும் அனுமார்களையும் தேர்தலில் ஆதரிக்கக் கூடாது இந்நாட்டு காமராஜர் போன்ற காங்கிரஸ் தலைவர்கள்தான், உள் உளவு ஆட்கள்—என்று கூறத்தோன்றும் உனக்கு.

ஆகவே போட்டால் இந்தக் கருத்துதான் பிறக்கும்.

ஆகவே, ஆகவே போடாமல் ஆனல் போட்டு, காமராஜர் காங்கிரஸ்காரர்தான், அந்த முறையில் வடநாட்டுக்குக் கங்காணிதான், ஆனல் அவர் நல்லவர் நம்மவர், ஆகவே அவரை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேம், அவர் 'ஒண்டிக்கட்டையாக' வெற்றிபெற்ருல் பலன் இல்லை, ஆகவே காங்கிரஸ் மெஜாரிடியாக வெற்றிபெறப்பாடுபட்டுத் தீரவேண்டும். ஆனல் காங்கிரஸ் நல்ல ஸ்தாபனம் என்று எண்ணிவிடாதீர்கள், அது முதலாளி முகாம், பார்ப்பனப் பாதுகாபபுச்சபை வட

ஆகவே ஆனால்...அப்படிச் செய்தனர்!

நாட்டுக்கு நாட்டைக் காட்டிக்கொடுக்கும் கங்காணி ஸ்தாபனம்—என்று எடுத்துரைக்கப்படுகிற து.

இந்த அரசியல் தனி ரகமாக இருக்கிறதே என்பதற்காக அல்ல இதனைக் கூறுவது. இந்தக் கருத்தோவியத்தில், ஆனால்—ஆகவே என்ற சொற்கள் அரசியல் போக்கையே, தம் இஷ்டப்படி ஆட்டிப்படைக்கும் வேடிக்கையைக் கவனித்துக் களிப்புறுவதற்குத்தான்.

அண்ணா! உன் நோக்கம் இந்த இருசொற்கள் நடத்தும் சிலம்ப வேலையின் வேடிக்கையை எடுத்துக் காட்டுவதாக இருப்பினும், இடையிடையே வரும் அரசியல் பிரச்சினைகளை அடியோடு எப்படி ஒதுக்கிவிட முடியும்—ஆகவே ஒரு கேள்வி கேட்கிறேன்—காங்கிரஸ் கெட்டதுதான், காமராஜர் போன்றவர்கள் வடநாட்டு ஆதிக்க வளர்ச்சிக்கு உடந்தைதான், ஆனால் காங்கிரசை இதற்காக ஒழிப்பது என்று நாம் முயற்சிக்கும்போது, அதனைச் சாக்காகக்கொண்டு சந்து கிடைத்ததும் பொந்து ஆக்கிக்கொள்ளும் நச்சுகள் இடம் பெற்றுவிட்டால் என்ன செய்வது சொல்லு கேட்போம்—என்று கேட்கத் தோன்றும், தம்பி

பெரியார் இதை எண்ணிப்பார்க்காமலில்லை! இது பற்றி அவர் தீர்க்கமாக ஆலோசித்துப் பார்த்தான பிறகு, சொல்லுகிறார்—சொல்லி இருக்கிறார்...

> "காங்கிரசை ஒழிப்பதற்கு முதல் வேலை காங்கிரஸ் எதிரிகளுக்கு வெற்றி உண்டாக்குவதே யாகும். உண்மை எதிரி கிடைக்காத இடத்தில எதிரி வெற்றி பெறமாட்டார் என்று கண்ட இடத்தில் வசதிபோலப் பார்த்து யாருக்கு ஓட்டுப்போட்டால், காங்கிரஸ் தோல்வி அடையும் என்பதாகக் காணக் கிடைக்கிறதோ அந்தப் பெட்டியில் ஓட்டுப் போடுங்கள். வேறு அபேட்சகர் இல்லை என்றோ. வெற்றி பெறமாட்டார் என்றோ; கண்ட இடத்தில், பார்ப்பனருக்கு ஓட்டு போட்டால்தான் காங்கிரஸ் அபேட்சகர் தோல்வியுறுவார் என்று கண்டால், பார்ப்பனருக்கு ஆவது ஓட்டுசெய்து காங்கிரசைத் தோற்கடிக்க வேண்டியது அறிவுடைமையாகும், கங்காணிகள்—துரோகிகள்—உண்மைச் சூத்திரர்கள்—பேச்சைக் கேட்டு எந்தக் காரணத்தைக்கொண்டும் காங்கிரஸ் கங்காணிப் பெட்டியில் ஓட்டுவிழும்படி நடந்து கொள்ளாதீர்கள். எப்படியாவது காங்கிரஸ் அழிய வேண்டும் ஒழிய வேண்டும், ஏன் என்றால் அது நம் நாட்டுப் பார்ப்பனர்போல் தேவை இல்லாத ஸ்தாபனம்— கேடான கேட்டை விளைவிக்கும் உளமாந்தை போன்ற ஸ்தாபனம் என்பதே நமது முடிவு."

தம்பி! இன்னும் என்ன விளக்கம் வேண்டும்?

அப்போதைக்கு இப்போதுள்ள நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்த்தால், சென்ற தேர்தலின் போது, அபேட்சகர்கள் நிறுத்தும் வேலையில் ஆச்சாரியார் ஈடுபடவில்லை. இப்போது டி டி. கிருஷ்ணமாச்சாரியார் அந்தக் காரியத்தைக் கவனிக்கப்போகிறார்!

இந்தக் கட்டம் வந்ததும், மீண்டும் அந்தப் பொல்லாத சொற்கள் வந்துவிடுகின்றன வளைவும் நெளிவும் தெரிகின்றன.

ஆனால், ஆகவே என்ற சொற்களின் சுவைமிகு கதையை நான நமக்குச் சாதகமாக்கிக்கொண்ட கோபத்தில், சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளைகள், அதே பாணியில் தன்னால் எழுதும். படித்துச் சுவைத்திடுவதுடன், நாம் நமக்காக மட்டுமல்ல, நம்மைத் தாக்குவோருக்கும் உதவுகிறோம் என்று பெருமையும் கொள்ளலாம்.

நினைக்க நினைக்க வேடிக்கை வேடிக்கையாக இருக்கிறது. இந்த இரு சொற்கள் நடத்தும் விளையாட்டு.

குமாரசாமி ராஜா, வடக்கு பொருளைப் பாழாக்குகிறது ராஜ்ய சர்க்கார் விஷயத்தில் அனாவசியமாகக் குறுக்கிடுகிறது, அதன் இந்தப் போக்கை நாம் எதிர்க்க வேண்டும்—என்றெல்லாம் பேசினார் அல்லவா!

அந்தப் பேச்சுடன் அவர், 'ஆகவே' எனும் சொல்லை இணைத்திருந்தால், இன்று, தென்னாட்டு விடுதலைப் போர்த் தலைவராகி, செயல்பட வேண்டி வரும். அவருக்கு அது விருப்பமில்லை. ஆகவே, ஆகவே'வை விட்டுவிட்டார். இப்போது 'ஆனால்' பேச ஆரம்பித்து விட்டதாகத் தெரிகிறது.

வடக்கு அப்படிச் செய்கிறது. அது, இது என்று நான் சொன்னேன்—ஆனால் எனக்கு வடநாடு தென்னாடு பேதம் கிடையாது—அந்தக் காரியத்தை நான் ஆதரிக்கவும் மாட்டேன்—எதிர்க்கக் கூடச் செய்வேன்—நான் காங்கிரஸ்வாதியாக்கும்! — என்று நிருபரிடம் கூறுகிறாராம்.

பார்த்தாயா, தம்பி, ஒரே ஒரு சொல், ஒருவருடைய போக்கையே மாற்றவிடுகிறது.

'ஆகவே" என்று அவர் கூறினால் எப்படி இருந்திருக்கும்—ஆனால் என்று கூறும்போது எப்படி இருக்கிறது!

மைசூரில் முதலமைச்சராகஇருந்த அனுமந்தையாவும்

> காங்கிரஸ் கெட்டுவிட்டது.
> சுயநலமிகள் புகுந்து விட்டார்கள்.
> இந்தியா, அமெரிக்காவுக்கோ ரஷியாவுக்கோ அடிமை ஆகிவிடும்.
> ஏதோ, நேருவின் புகழ், செல்வாக்கால் அந்த அவதி இன்னும் வரவில்லை.

என்பதாகப் பேசியிருக்கிறார்.

"'ஆகவே"—என்று பேசினால் ஒரு தினுசான அனுமந்தய்யாவும், 'ஆனால்' என்று பேசினால் முற்றிலும் வேறுவிதமான அனுமந்தய்யாவும் தெரிவார்களல்லவா!

ஆகவே, தம்பி, ஆனால் என்பதற்கும், ஆகவே என்பதற்கும் உள்ள மகத்தான சக்தி, பிரச்சினைகளை, நிலைமையை, போக்கை எப்படி எப்படி எல்லாம் உருவாக்க, மாற்றி அமைக்க முடிகிறது என்பதுபற்றி எண்ணிப் பார்த்தேன், ஏ! அப்பா! ஏடு போதாது அவ்வளவு கருத்தலைகள் எழுகின்றன! ஆனால் அவ்வளவும் ஒரு இதழில் தரமுடியுமா, ஆகவே, இத்துடன் இதனை நிறுத்திக் கொள்கிறேன். உறக்கமும் வருகிறது, காகம் கரைவது காதில் விழுகிறது,

அண்ணன்,



(16—9—56 திராவிட நாடு இதழில்)

களங்கம்

—முல்லை மாதவி—

திரு. ஏ. சி. சட்டர்ஜி தொலைபேசியின் மூலம் அந்தத் தகவலைச் சொன்னபோது நான் அதிர்ந்து போய்விட்டேன். பரிதாபத்திற்குரிய அந்தப் பெண் லீலா வினோதினியின் களங்கமற்ற குழந்தை முகம் என் மனத்திரையில் ஒரு வினாடி நிழலாடியது.

"பாவம்!" என்று என் உதடுகள் முணுமுணுத்துக் கொண்டன.

லீலா! எவ்வளவு அழகானவள் அவள்! ஆனால் உதிர்ந்துவிட்ட சருகுபோல அவளுடைய வாழ்க்கை எப்படிச் சீரழிந்துபோய்விட்டது!

சட்டர்ஜி தொலைபேசியில் சொன்ன அந்தக் குரல் என் காதில் ஒலியிட்டுக்கொண்டே இருந்தது.

"உங்களுக்குச் செய்தி தெரியுமா? லீலா வினோதினி அவள்தான்... அந்த ராபர்ட்... அவள் தற்கொலை செய்து கொண்டுவிட்டாளாமே..."

—ஓ! எவ்வளவு மோசமான முடிவு அவளுக்கு?

கண்ணாடி சன்னல் வழியே கீழே பார்த்தேன். பம்பாயின் நடுமையமான வணிகத்தலமான அந்...டத்தின் மூன்றாவது மாடியிலுள்ள ...க அறையிலிருந்து பார்க்கும்... 'கிரீன்சால்' தெருவின் இ... ர வேகத்தை என்னால் உண... டிகிறது...

திரு சட்டர்ஜி முக்கியமான ஒரு பாங்கின் ஏஜெண்டாக இருப்பவர். ரோடரி கிளப்பின் மூலமாக எங்களுக்குள் அறிமுகம் ஏற்பட்டது. நானும் ஒரு ரொடேரியன். ரோடரி கிளப்பின் ஏதோ ஒரு கூட்டத்தில் எற்பட்ட அறிமுகம் எங்களுக்குள் பின்னிப் பிணைந்து பெருகிவிட்டது. அனேகமாக நாள்தோறும் கடற்கரைப் பகுதியில் எங்களைப் பார்க்கலாம்.

திரு சட்டர்ஜி திருமணமாகிவெகு விரைவிலேயே மனைவியை இழந்துவிட்டடவர். அதன் பிறகுதிருமணம் செய்துகொள்வதைப் பற்றி அவர் யோசிக்கவே இல்லை. எனக்கும் இன்னும் திருமணமில்லை. மாதுங்காவில் ஒரு மூன்றாவது மாடியின் ஒரு சிறிய அறையில்—அதற்கு வாடகை நூற்றிஐம்பது ரூபாய்!—நான் தங்கியிருந்தேன். திரு சட்டர்ஜிக்கு, சையான் பகுதியில் அவர் பணியாற்றிய பாங்கின் காலனியில் இடம் கிடைத்திருந்தது.

நாங்கள் இரண்டு பேருமே தனிக் கட்டைகள். அதனால்தானோ என்னவோ எங்களுக்கிடையே நட்பு மிகச் செழித்து வளர்ந்தது.

எங்கள் இரண்டு பேருடன் மூன்றாவதாக ஒருவரும் சேர்ந்தார். 'தி ஏஷியாடிக் கம்பெனி' என்ற ஒரு பிரபல ஏற்றுமதி இறக்குமதி நிறுவனத்தில் பொறுப்பான ஒரு பகுதியில் அதிகாரியாக இருந்த அவருடைய பெயர் இராபர்ட் மார்ட்டின்.

அவரும் ரோடரி கிளப் மூலமாகத்தான் அறிமுகமானார். நாங்கள் மூவரும் நெருங்கிய நண்பர்களாகிவிட்டோம். நாள்தோறும் எங்களுடன் கடற்கரைக்கு வராவிட்டாலும் அடிக்கடி எங்களுடன் சேர்ந்து கொள்வார். இராபர்ட் திருமணமானவர். மனைவியும் மூன்று குழந்தைகளும் அவருக்கு இருந்தனர்.

லீலா வினோதினி. அந்தப் பரிதாபத்திற்குரிய பெண், இந்த இராபர்ட்டின் மூலம்தான் எங்களுக்கு அறிமுகமானாள். ஆனால் அந்த அறிமுகமும், அதற்குப் பின்பு தொடர்ச்சியாகநடைபெற்று, இதோ இன்று அவளுடைய தற்கொலையின் மூலம் ஒரு முடிவுக்கும் வந்துவிட்ட கதையினையும் நினைத்துப்பார்க்கும்போது...அவை எவ்வளவு வேதனை தரத்தக்கவை.

இராபர்ட்டின் குணத்தைப் பொறுத்தவரை தங்கம்தான்! யாருக்கும் தீங்கு செய்ய நினைக்காதவர். நல்ல பண்பாளர். அவருடைய தூய்மையையும் பண்பையும் நாங்கள் யாரும் சந்தேகிக்கவேயில்லை! முதன் முதலாக, இராபர்ட் இந்த லீலா வினோதினியிடத்துக் கொண்டிருந்த தொடர்பை உணர்ந்தபோது நாங்கள் எப்படி அதிர்ச்சியடையாமலிருக்க முடியும்!

இராபர்ட், அலுவலக விஷயமாக அடிக்கடி வெளியூருக்குச் சென்று வருவது வழக்கம்.

பம்பாயிலிருந்து வடகிழக்கே ஏறத்தாழ நானூற்று இருபது மைல் தூரத்தில், இந்தூர் நகருக்குப்பக்கத்தில் 'மோவ்' என்ற நகரில் அவருடைய நிறுவனத்தின் கிளை அலுவலகம் ஒன்று இருந்தது. இராபர்ட் அடிக்கடி செல்லும் நகரங்களில் இதுவும் ஒன்று. சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னரும் வழக்கம் போல அவர் அங்கே சென்று ஒரு வாரம் தங்கியிருந்து விட்டுத் திரும்பினார்.

திரும்பியதிலிருந்து, அவரிடத்தில் பழைய கலகலப்பும், களையும் மறைந்து போயிருந்ததைஎங்களால் உணர முடிந்தது. பழையபடி எங்களோடு அவர் அடிக்கடி கலந்து கொள்வதில்லை. இவை எங்களுக்கு வியப்பளித்தன. இருந்தாலும் அவராகவே ஏதாவது சொல்வார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் அவர் ஏறத்தாழ இரண்டு மாதங்கள் வரை அதைப்பற்றி எதுவுமே சொல்லவில்லை

ஒரு நாள் மாலை கடற்கரையில் அமர்ந்துகொண்டிருந்த பொழுது, திரு. சட்டர்ஜி வற்புறுத்திக் கேட்டார். அப்போதுதான் இராபர்ட் ஒரு பெருமூச்சுடன் சொல்ல ஆரம்பித்தார்.

"உங்களிடத்தில் முதலிலேயே நான் இதைச் சொல்லி யிருக்க வேண்டும்......ஆனால் ... இதற்காக நானே வெட்கப்படுகிறேன்..." என்றவர் ஒருபெருமூச்சுடன் முணகினார். "நான் இரட்டை வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறேன். மிஸ்டர் சட்டர்ஜி...இரட்டை வாழ்க்கை வாழ்கிறேன்..."

"தயவுசெய்து விளக்கமாகச் சொல்லுங்கள்..." என்றார் சட்டர்ஜி,

சிறிதுநேரம் விரக்தியோடு தூரத்தில் விழிகளைப் பதித்திருந்த ராபர்ட் பிறகு ஏக்க மூச்சுடன் ஆரம்பித்தார்.

"உங்களுக்குத் தெரியும்...இந்தூருக்கு அருகே 'மோவ்' நகருக்கு அடிக்கடி நான் 'கேம்ப்' போவதுண்டு...அங்கே வீட்டைப்போன்ற சூழ்நிலையில் அமைந்திருந்த 'டி-கேன் லாட்ஜ்' என்ற விடுதியில்தான் தங்குவது வழக்கம்; பக்கத்து வீட்டில் ஒரு பத்திரிக்கை நிருபர், அவர் பெயர் நிர்மல் பண்டோட்கர், குடியிருந்தார். அடிக்கடி நாங்கள் சந்தித்துப் பழகிக் கொண்டோம். அவருடைய மகள்தான் லீலா வினோதினி..." — என்று சொன்ன ராபர்ட் சிறிதுநேரம் மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு தொடர்ந்தார்.

"தந்தையின் மூலம் அவளும் எனக்கு அறிமுகமானாள். எனக்கு இலக்கியத்தில் ஈடுபாடு இருக்கிறது என்றுதான் தெரியுமே. அவளுக்கும் இலக்கியத்தில் மிக ஈடுபாடு. இந்த ஒற்றுமையின் காரணமாக, நாங்கள் அடிக்கடி இலக்கியத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்போம்..."

விரக்தியோடு சற்றே நிறுத்தினார் இராபர்ட்,

"இது ஆறு மாதங்களுக்கு முந்திய கதை. அவள் அடிக்கடி நான் தங்கியிருக்கு மிடத்துக்கு வருவதுண்டு... அப்படித்தான் அன்றும்... அதை நான் எப்படிச் சொல்வேன் மிஸ்டர் கணேஷ்..." என்று முணகினார், வேதனையுடன்.

நாங்கள் யாரும் எதுவும் சொல்லவில்லை, அவரே தொடர்ந்தார். "நான் 'மது' அருந்துபவன் அல்லவா!......அன்றும் அப்படித்தான். மது அருந்திவிட்டுப் படுக்கையில் சாய்ந்திருந்தேன். அப்போது அந்த லீலா வினோதினி அங்கே வந்திருக்கிறாள்...நான் என் நினைவை இழந்த நிலையில், விலங்கு வெறிக்கு அடிமையாகி எப்படி அந்தக் காரியத்தைச் செய்யத் துணிந்தேன் என்பதை இன்றுகூட நினைத்து வியப்படைகிறேன். அதற்காக வேதனைப்படுகிறேன் ...... நடக்கக் கூடாத நிகழ்ச்சி நடந்து முடிந்த பிறகு, லீலா வினோதினியின் கலங்கிய கண்ணீர் விழிகளைப் பார்த்தபோது ...அந்த ஒரு வினாடி, எவ்வளவு கொடிய வினாடியாக இருந்தது எனக்கு?

"...அவள் நினைத்திருந்தால் அந்தச் சமயத்தில் கத்திக் கூச்சலிட்டு பிறரை வரவழைத்திருக்கலாம். ஆனால்......என்னுடைய மானம் முழுமையும் அந்த ஒரு கணத்தில் பிரர் நடுவே இடிந்து பொடியாகிப் போவதைச் சகித்துக் கொள்ள இயலாமல்தான் அவள் ஆதைச் செய்யத் துணியவில்லை என்பதை பிறகு அவளே சொன்னபோது... அவளுடைய நெஞ்சம் தான் எத்துணைத் தூய்மையானது ...! நான் திருமணமானவன் என்ற செய்தியை அவர்களிடம் நான் சொல்லியிருக்கவில்லை...இந்த நிலை எனக்குக் கைகொடுத்தது. அவளைக் காப்பாற்றுவதாகச் சொல்லி, அந்தச் சமயத்தில் அவள் கண்ணீரைத் துடைத்தேன்..."

இராபர்ட் பெருமூச்சுடன் தொடர்ந்தார். "அது எவ்வளவு முட்டாள்தனமான செய்கை என்பதை இப்போது உணருகிறேன். ஆனால் அந்தச் சமயத்தில் அதைத் தவிர வேறு வழியில்லை...சொல்லப்போனால் நான் என் மனைவி எலிசபெத்தையோ அல்லது இந்த லீலா வினோதினியையோ கொஞ்சம்கூட ஏமாற்ற நினைக்கவில்லை. ஆனாலும் ஒருவகையில் இந்த இரண்டு பேரையுமே ஏமாற்றக் கொண்டிருந்திருக்கிறேன்..."

"அதன் பிறகு இரண்டு மூன்று முறை நான் விரும்பியபோ விரும்பாமலோ, அவளுடன் தொடர்பு கொண்டேன்... சொல்லப்போனால் இன்று அதைப்பற்றி நினைத்துப் பார்க்கும்போது எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது...

'மூன்று மாதங்களுக்கு முன்பு போனபோது அவள் சொன்ன செய்தியில் அதிர்ந்தேன் அவளுடைய வயிற்றில என் குழந்தை வளந்துகொண்டிருப்பதாகவும், கூடிய விரைவில் திருமணம் செய்துகொண்டுவிட வேண்டும் என்றும் வற்புறுத்தினாள்......எனக்குத் திருமணமாகியிருக்கிறது என்ற உண்மையை அப்போதாவது ஒத்துக்கொண்டிருக்கலாம்....... ஒருவேளை வளர்ந்துவிட்ட இந்தச் சிக்கலுக்கு அன்றே ஏதேனும் ஒரு முற்றுப்புள்ளி நேர்ந்திருக்கலாம். ஆனால்... தெய்வமே, நான் தவறு செய்துவிட்டேன்..."என்று சொல்லி நிறுத்தினார். கண்களில் நீர் கசிந்துகொண்டிருந்தது.

அவராகவே தொடரட்டும் என்று கருதி கடற்கரையின் வெண்மணலை வெறிக்கப்பார்த்தபடி அமர்ந்திருந்தோம்.

"நிலைமை விபரீதமாகிவிடும் போலத் தெரிந்த பிறகு அவளையும் அழைத்துக் கொண்டு பம்பாய் வந்து சேர்ந்தேன். பம்பாயில் தனியே ஒரு வாடகை அறை எடுத்துக் குடித்தனம் நடத்தினேன். இவ்வாறு இரண்டு குடித்தனங்கள் நடத்திக் கொண்டிருப்பது எவ்வளவு வேதனை தரக்கூடிய நிலை என்பதை என்னால் விவரிக்க இயலவில்லை...." நாங்கள் மௌனமாக அமர்ந்திருந்தோம்.

பெருமூச்சுடன் தொடர்ந்தார் இராபர்ட். "இந்தச் சிக்கலிலிருந்து விடுபட நினைக்கிறேன். முடியவில்லை......நீங்கள் ஏதாவது வழி சொல்லுங்களேன்..."

சட்டர்ஜி சொன்னார்: '...நீங்கள் உங்கள் மனைவியிடம் இந்த விஷயத்தை முன்பே சொல்லியிருக்க வேண்டும்...அதனால் பரவாயில்லை ...இப்போதேனும் நீங்கள் சொல்லிவிடலாம்..."

அதைக் கேட்டு விரக்தியுடன் சிரித்தார் இராபர்ட். "ஆனால் இதன் பின் விளைவுகள் மிக மோசமாக இருந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன்...என் மனைவி சட்டென உணர்ச்சி வயப்படக்கூடியவள்... என்மீது அவளுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு...அந்த நம்பிக்கை சிதறுகின்ற நிலையை அவளால் சகித்துக்கொள்ள முடியாது..."

எங்களுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. ஒரு நல்ல மனிதரான இராபர்ட்டுக்கு, மதுப் பழக்கத்தால் இந்தக் கடுமையான சோதனை ஏற்பட்டது குறித்து வேதனைப்பட்டோம். வேறு என்ன செய்வது? அவருக்கு என்ன வழி காட்டுவது? 'யோசிக்கிறோம்' என்று மட்டும் ஆறுதலாகச் சொன்னோம்.

ஐந்து நாட்களுக்குப் பிறகு ஒரு நாள். காலையில் என் அலுவலகத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த பொழுது இராபர்ட்டின் மனைவி எலிசபெத் தன் மகளான இரண்டு வயது சிறுமியோடு என் அறையின் வாயிலில் வந்து நின்றாள். அவளுடைய தோற்றம் எனக்குத் திகிலை விளைத்தது. 'வாருங்கள்" என்று சொன்னேன். ஆத்திரமான படபடப்புடன் உள்ளே நுழைந்த அவள் "உங்கள் நண்பர் செய்த காரியத்தைப் பார்த்தீர்களா?" என்று பரபரப்போடு கேட்டாள். அவள் விழிகளில் நீர் முட்டிக் கொண்டு நின்றது.

நான் ஆறுதல் படுத்த முயன்றது தோல்வியையே தந்தது. "நடந்தது நடந்துவிட்டது, சகோதரி. இதைப் பெரிதுபடுத்த முயன்றால் விளைவுகள் விபரீதமாகிவிடும்" என்று நான் சொன்னபோது,

"இல்லை ... இதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும்..." என்று படபடத்தாள்.

'வீணாக ஒரு பெண்ணின் வாழ்க்கை பாழாகிவிடக்கூடாது..." என்றேன் நான்.

"இதோ இந்தக் குழந்தைக்கு என்ன சொல்கிறீர்கள்? இவளுடைய வாழ்க்கை பாழாகவில்லையா......?" என்று சீற்றத்துடன் கேட்டாள்.

நான் ஆறுதல்படுத்த நினைத்தேன்; முடியவில்லை. "உங்கள் நண்பருக்கு நீங்கள்தான் சொல்லவேண்டும்......எப்படியாவது அந்தப் பாதகியை எங்கள் வாழ்விலிருந்து விரட்டி அடியுங்கள்......" என்றாள் அவள்.

'சகோதரி, உங்கள் கணவர் நல்லவர். அவளும்தான். எப்படியோ தவறு நடந்துவிட்டது. இது விதியின் தவறு......"

அவளுடைய சீற்றம் குறையவேயில்லை. 'நான் நேரில் அவளையே போய் இரண்டில் ஒன்று கேட்கப் போகிறேன்......" என்று கூறிவிட்டு ஆத்திரத்துடன் சென்றாள். நான் திகைத்து நின்றேன்,

அன்றைய அலுவல்களில் தடுமாற்றமே எனக்கு மிகுந்திருந்தது

அமைச்சர் கோவிந்தசாமி குடும்ப நிதி
கழகப் பொருளாளர் வேண்டுகோள்

தன்னலமற்ற தொண்டுணர்வோடும், தளராத ஊக்கத்தோடும் கழகத்திற்கும் — கழக அமைச்சரவைக்கும் அருந்தொண்டாற்றிய செயல் வீரர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் திடீர் மறைவு காரணமாகச் செயலிழந்து நிற்கும் அவர்தம் குடும்பத்தாருக்கு, தி. மு. கழகச் சார்பில் ரூ 1 இலட்சம் நிதி திரட்டி அளிப்பதாக நான் ஏற்கனவே தெரிவித்த கருத்தினைத் தொடர்ந்து இந்த வேண்டுகோளை விடுக்கிறேன்.

அடுத்து வரும் ஜூலைத்திங்கள் இறுதிக்குள் ரூ. 1 இலட்சமும் திரண்டிடும் வகையில் தாராளமாக நிதி அனுப்பிக்கொடுக்குமாறும் ஒத்துழைப்பு தருமாறும் நாடெங்கும் உள்ள கழக அமைப்புக்களையும், கழகத் தோழர்களையும், நாடாளுமன்ற—சட்டமன்ற—உள்ளாட்சிமன்றக் கழக உறுப்பினர்களையும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நிதி அனுப்பவேண்டிய முகவரி:

மு. கருணாநிதி, பொருளாளர் தி. மு. க.
'அறிவகம்' இராயபுரம், சென்னை-13.

அன்பன்,
மு. கருணாநிதி,
பொருளாளர், தி. மு. க.

புயல் வீசப்போவது போன்ற மன வுறுத்தல். எலிசபெத், லீலா வினோதினியைச் சந்திக்கும்போது அது அவளுக்கு எத்தனை அதிர்ச்சியூட்டும்? தன்னுடைய காதலனுக்கு ஏற்கனவே திருமணமாகிவிட்டதென்பதை அந்தக் குழந்தைப் பெண் லீலா வினோதினி எப்படிச் சகித்துக் கொள்ளப் போகிறாள்? என் நினைவுகள் கலங்கிக்கொண்டேயிருந்தன.

அன்று மாலை சட்டர்ஜிக்குப் போன் செய்து விசாரித்தபொழுது அவர் சொன்ன தகவல் இன்னும் அதிர்ச்சியூட்டியது. முன் தினம் எலிசபெத்தின் சீற்றத்திற்கு முன்னின்று, தாங்காது வெளியேறிய இராபர்ட் திரும்பி வரவேயில்லையாம். அலுவலகத்திற்கும் விடுமுறைக் கடிதம் வரவில்லையாம்.

எலிசபெத்தைச் சென்று சந்திக்கலாம் என்று போனபோது அறையில் அவள் தனியே அழுதுகொண்டிருந்தாள். எங்களை நாங்களே அறிமுகப்படுத்திக்கொண்டு அவளை ஆறுதல்படுத்தினோம்; "சகோதரி, ராபர்ட் நல்லவர், ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு நிச்சயம் இல்லை. விதியின் தவறு இது ......பரவாயில்லை, நீங்கள் கவலைப் படவேண்டாம்! முடிவு நிச்சயம் இனிமையாக இருக்கும். நாங்கள் உங்கள் சகோதரர்கள் மாதிரி...... என்று தேற்றினோம்.

பிறகு இரண்டு நாட்கள் முயன்றோம். எலிசபெத்தைச் சந்திக்கவே முடியவில்லை. இராபர்ட்டைப் பற்றியும் தகவல் இல்லை.

மூன்றாம் நாள் காலை அலுவலகத்தில் அன்றைய பேப்பரைப் புரட்டிய பொழுது கண்ணில் பட்டசெய்தி என் இதயத்தை உலுக்கியது.

"தி ஏஷியாடிக் கம்பெனியைச் சேர்ந்த ராபர்ட் மார்ட்டின் என்பவருடைய மனைவியும் குழந்தையும் இரயில் முன் விழுந்து தற்கொலை செய்து கொண்டனர். இராபர்ட்க்கும்அவர்மனைவிக்கும்மன வேறுபாடு இருந்ததாகத் தெரிகிறது"—என்ற செய்தி என் உணர்வுகளை எரித்தது.

சட்டர்ஜிக்குப் போன் செய்துவிட்டு இருவரும் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு விரைந்தோம். உருக்குலைந்த பிணங்களே எங்களை வரவேற்றன.

இராபர்ட் என்ன ஆனார் என்று தெரியவில்லை. அவரைப் பற்றித் தகவலே கிடைக்கவில்லை.

அடுத்து மூன்றுநாட்கள் வேதனையில் ஊர்ந்தன. லீலாவினோதினி சோக பிம்பமாக இருந்தாள். முன் தினம்கூட அவளைப்பார்த்துவிட்டுத் தான் வந்தோம்.

இன்று, சட்டர்ஜி சொன்ன அந்தச் செய்தி......

லீலாவினோதியின் வாழ்க்கை எப்படிக் கருகிப் போய்விட்டது!

பலவீனமான குடிப்பழக்கம் ஒரு குடும்பத்தையும் ஒரு இளம் பெண்ணையும் எத்துணைத் தூரம் பாதித்து வட்டது?

சட்டர்ஜியும் நானும் லீலாவினோதினியைப்போய் பிணமாகச் சந்தித்தோம்.

இராபர்ட் அப்போதுகூட வரவில்லை. வரவேயில்லை.

* * *

இது பத்துமாதங்களுக்கு முன்பு நடந்த கதை. எலிசபெத்தும், லீலா வினோதினியும் கனவாகப் போய் விட்டார்கள்.

இன்று.

விக்டோரியா டெர்மெனஸ் அருகிலோ, ஜலஜாபாத்திலோ கடற்கரையிலோ, மாதுங்காவிலோ அல்லது பம்பாயின் ஏதோ ஒரு பகுதியில் கிழிந்த ஆடைகளுடன் பைத்தியமாக உலவிக்கொண்டிருக்கிறான் இராபர்ட். சிகிச்சையளிக்க முயன்றது வீணாகப்போய்விட்டது.

சில வேளைகளில் பெரிய பிரசாரகன் போல மதுவிலக்குப் பிரசாரம் செய்வதைமக்கள் வேடிக்கைப்பார்ப்பார்கள். ஆனால் அவன் வாழ்க்கையின் துயரப் பின்னணி அவர்களுக்குத் தெரியாது.

சில வேளைகளில் அவன் எங்களுக்கு அருகே எங்களைக் கடந்து செல்லும்போது அவனுடைய அலங்கோலமான நிலையைக் கண்டு நானும் சட்டர்ஜியும் பெருமூச்சு விடுவோம்.

இன்று காலையில்கூட டாரா பார்க் அருகே அவனைப் பார்த்தேன். 'சகோதரத் தாய்மார்களே, மது என்பது என்ன? காந்தி என்ன சொல்கிறார் என்றால்..." என்று பிரசாரம் செய்தபடி தன் ஆடைகளை ஒவ்வொன்றாகக் கிழித்து எறிந்து கொண்டிருந்தான்.

என் நெஞ்சில் உதிரம் சொட்டியது. அவனைப் பார்க்கச் சகிக்காமல் தலையைத் திருப்பிக்கொண்டு வந்து விட்டேன்.

இராபர்ட்! ஓ! இராபர்ட்!

தமிழ்த் திறம்!

★

ஆழிதனை ஆடையெனப் பூண்டபெரு உலகில்
ஆதவனும் தான்பிறந்த நாளதனைத் தானே,
ஏழிசையும் பெற்றதமிழ் பூத்தபெரு நாளாய்,
ஏற்றிடுவர் எங்குமுள நல்லறிஞர் தாமே!

ஆழ்கடலைத் தான்கடந்து அவனியெலாம் தமிழில்,
ஆட்சிதனைச் செய்தபெரு வீரர்முதலாக,
சூழ்பனிமலையத் தான்முடியாய்க் கொண்டமலை மீது
செயக்கொடியை நாட்டியபேர் மன்னரெங்கள்
முன்னோர்!

வாழுதற்கு வழிவகுக்கும் வண்மைமிகு நூல்கள்
வகைவகையாய்த் தோன்றிடினும் குறளுக்
கிணையாமோ?
சூழுமிருள் போக்குமொரு செங்கதிரோன் போன்று
தூயஒளி வீசுகுறள் எங்களுடைச் செல்வம்!

பாலுடனே தேன்பெருக்கும் ஆறுபல சூழ,
பார்த்தவுடன் பசியகற்றும் வயல்வெளியும் காவும்,
நூலசையும் இடமுமின்றி நிறைந்திருக்கும் நாடு,
நீளுலகை வென்றதமிழ் வீரர்களின் வீடு!

பால்நிலவின் பனியொளியும் பாவைதரும் சுகமும்,
பாலமிழ்தும் பைந்தமிழின் சுவைக்குநிக ராமோ?
வேல்வலியும் வாள்வலியும் வீண்வலியாய் ஆகும்,
வெல்லுதற்கு அரியதமிழ் தனையழிக்க முனைந்தால்!

கனலுக்கும் புனலுக்கும் கலங்காத தமிழோ,
கதியற்ற மொழியினுடை கால்பிடிக்கும் இன்று?
அனல்பட்டு எம்முடலம் வெந்தாலும் மாற்றார்
ஆளுதற்கு விடமாட்டோம் என்பதிது உறுதி!

—இல. குப்புசாமி.

வினா-விடை

1. உணவுப் பொருள் தட்டுப்பாடுள்ள இந்த நேரத்திலும் பதுக்கல், கடத்தலில் ஈடுபட்டிருக்கிறார்களே சிலர், மனிதர்கள்தானா?

இதென்ன கேள்வி! மனிதர்களாக இருப்பதனால்தானே இது போன்ற இழிவுகளைச் செய்ய அவர்களால் முடிகிறது.

2. தெலுங்கானா போராட்டம் வெற்றி பெறுமா?

ஆந்திர மாநிலப் பிரிவினை கூட போராட்டத்துக்குப் பின்னர்தான் கிடைத்தது! அப்போது நேரு இருந்தார்! இப்போது அவரது மகளார்தானே இருக்கிறார்!

3. நேருவின் மறைவை நினைந்து அஞ்சலி செலுத்திய காங்கிரசுக்காரர்கள் என்ன நினைத்துக் கொண்டிருப்பார்கள்?

மீண்டும் உயிர் பெற்று வந்து எங்கள் 'பிரச்னை''களைத் தீர்த்து வைக்கமாட்டீர்களா? என்று கேட்டிருக்கக் கூடுமோ!

4. ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகள் வெற்றி பெறும் வாய்ப்புண்டா?

வெற்றி வாய்ப்புண்டு என்பது என்னவோ உண்மைதான்! ஆனால் எதிர்க்கட்சிகள் எல்லாமாக இணைந்து செயல்படும் வாய்ப்புண்டா என்பதுதான் ஐயம்.

5. மேற்கு வங்க அரசு நிலைத்து நிற்குமா?

நிலைத்திருந்து ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டும்! ஆனால் கேரோவுக்கு ஒரு அமைச்சரே ஆட்பட்ட பின்னர், அமைச்சர்களுக்குள்ளேயே புகைச்சல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. விரிசல் அடைந்து விடக்கூடும் என்று யூகிக்கவும் இடமிருக்கிறது.

6. திரைப்படப் பாடல்கள் தரங்கெட்டுக் கொண்டிருப்பதைக் கவனித்தீர்களா?

பாடல்கள் மட்டுந்தானா? படங்களும் கூடத்தான்! தரமானவர்களைக் கொண்டு பாடல்கள் எழுதச் சொல்ல வேண்டும்; தரமானவர்களைக் கொண்டு தயாரிக்கச் செய்யவேண்டும். இரண்டும் நடக்கப் போவதில்லை. அதனால் தரமும் கிடைக்கப் போவதில்லை. திரையுலகின் சாபம் அப்படி!

7. தமிழக வறட்சி நிலையை ஆராய இன்னுமொரு நிபுணர் குழு வரப் போகிறதாமே?

ஆமாம்! தங்களைத் தாங்களே நம்ப முடியாதவர்களாக இருக்கும்போது, அடுத்தவனை மட்டும் அவ்வளவு எளிதில் நம்பிவிடுவார்களா என்ன? அதிகாரிகளைப் பிரதமரும் நம்பவில்லை — பிரதமரை அதிகாரிகளும் நம்பவில்லை என்பதுதானே இதன் பொருள்.

8. பர்மா அகதிகளுக்கும் தமிழ்நாடுதான் அடைக்கலமா?

அகதிகள் என்றாலே தமிழர்கள் என்றொரு பொருள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதனை அறியீரா நீர்?

9. அரசியல் போராட்டங்களில் அரசு ஊழியர்கள் கலந்துகொள்ளலாமா?

வயிறு புடைக்கத் தின்றுவிட்டு வேலையற்றிருப்பவர்களுக்குரியது அரசியல்! அதிலே வயிற்றுக்காக உழைப்பவர்களுக்கு வேலையேது!

10. 'நக்சல்பாரிகள்' என்போர் யார்?

'மூன்றாந்தர கம்பூனிஸ்டு'கள் என்பதாகும். அதாவது வலதுசாரி, இடதுசாரி என்று இரண்டு தரங்களுக்கு அடுத்த மூன்றாவது தரம். 'உயிர்க் கொலை' 'வன்முறை' இவைகளினாலேயே புரட்சி செய்து புதுமைகள் விளைப்பது இவர்களது குறிக்கோளாம்!

11. காங்கிரஸ் ஏடுகள் எதை வைத்துப் பிழைக்கின்றன?

பொய்யை—பித்தலாட்டத்தை! 'சிண்டுமுடி' வேலைகளை!

12. தொழிலாளர்களது தகராறுகள் தீர்க்கப்பட உருப்படியான வழியேதும் உண்டா?

இல்லாமலென்ன! தொழிலாளர்களைச் சுற்றி எழுப்பப்பட்டுள்ள அரசியல் அரண் அகற்றப்பட்டு விட்டாலே போதும் — பெரும்பான்மையான தகராறுகள் தீர்ந்த மாதிரிதான்!

13. தொழில் தகராறுகளுக்கு அடிப்படைக் காரணம் யாது?

பேராசை—சுயநலம்—உழைக்காமலே கூலி பெறவேண்டும் என்ற துடிப்பு!

14. மாநில ஆட்சியை மீண்டும் காங்கிரஸ் கைப் பற்றுமா?

மத்திய ஆட்சியையே கைப்பற்ற முடியுமா? என்பதில் காங்கிரசுக்குள்ளேயே கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கிறதே!

15. தமிழ் நாட்டுக் கல்வித்துறை கிறித்துவமயமாகிக் கொண்டிருப்பதாக ஒரு ஏடு எழுதியிருப்பதனைக் கவனித்தீர்களா?

உண்மைகளை யார் தெரிவித்தால் என்ன!

16. காங்கிரசுக்காரர்கள் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஊக்கம் தரத் தொடங்கி இருப்பது எதைக்காட்டுகிறது?

விரைவாக, காங்கிரசுக்காரர்களே சிலர், 'காங்கிரசைக்கலைக்க வேண்டும்' என்று கேட்டுக்கூட சாகும் வரையில் உண்ணாவிரதம் என்று அறிவிக்கக்கூடும் என்பதைக்காட்டுவதாக இருக்கலாம்!

17. வடநாட்டில் நிகழ்கிற ஒவ்வொரு மதநிகழ்ச்சிகளிலும் குழப்பங்கள், அடிதடிகள் நடக்கின்றனவே, ஏன்?

அவை வடநாட்டில் நிகழ்வதால்!

★★★★★★★★★★★★★★

விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர்கள் அனைவருக்கும் மே மாத பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித்தொகை முழுவதையும் அனுப்பிவைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்.
'காஞ்சி.'
காஞ்சிபுரம்-3

★★★★★★★★★★★★★★

சென்னை மிட்லண்ட் ஏர்கண்டிஷண்ட் · ஸ்ரீ கிருஷ்ணா · மேகலா · நூர்ஜஹான்
மற்றும் தென்னகமெங்கும்
புரட்சி நடிகரின்
அடிமைப் பெண்
ஈஸ்ட்மென் கலர்
எம்ஜியார் பிக்சர்ஸ் தயாரிப்பு
உரையாடல் சொர்ணம் · இசை · K.V. மகாதேவன் · ஒளிப்பதிவு · V. ராமமூர்த்தி · சண்டைப்பயிற்சி சியாம் சுந்தர்
டைரக்ஷன் · K. சங்கர் · ஸ்டுடியோ · சத்யா

கேட்டீரா சேதி!

மொரார்ஜிதேசாய் துணைப் பிரதமர் மட்டுமல்ல; ஒரு சினிமா நடிகரும்கூட என்று இப்போது தெரிவித்திருக்கிருர். சினிமாவில் நடித்த அனுபவமும் தனக்கு இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, தான் நடித்த படத்தின் பெயரையும் வெளியிட்டிருக்கிருர். இளமை முடுக்கில் நடித்தாரோ என்னவோ! அந்தப் படத்துக்கு இனிமேல் ‘ஹவுஸ்புல்’ வசூல்கூட ஆகக் கூடும். “பாபுனே சுகாதா” என்ற அந்தப் படத்தில் 12 நிமிட நேரம் அவர் தோற்றமளிக்கிருராம். மொரார்ஜியை அருகே வைத்துக் கொண்டுதான் படம் பார்க்க வேண்டியேற்படுமோ என்னவோ- அடையாளம் காட்டுவதற்கு! ஆனுல் ஒரேயொரு நன்மை விளைந்தால் சரி திரையுலகில்தான் கருப்புப் பணம் ஏராளமிருப்பதாகத் தெரிகிறது. மொரார்ஜியும்கூட இக் கருத்தை வெளிப்படுத்தியிருக்கிருர். தன் அனுபவத்தை இதற்குப் பயன்படுத்த வேண்டும்! பயன்படுத்திஞல் நல்லது! நடக்குமா?

* * *

மூடிய மில்களைத் திறக்கக்கேட்டு தமிழ் நாட்டிலுள்ள வலதுசாரி பொதுவுடைமைக் கட்சியினர் ரயில் நிறுத்தப் போராட்டம் நடத்திக் கைது செய்யப்பட்டு, காவலிலும் வைக்கப்பட்டு விடுதலையும் செய்யப்பட்டுவிட்டார்கள். மில்கள்மூடிக் கிடக்கின்றன என்பது உண்மைதான். அதில் மத்திய அரசு அக்கறை காட்டாமலிருக்கிறது என்பதும் கண்டிக்கப்பட வேண்டியது தான். ஆனுல் கம்யூனிஸ்டுகளது இந்தப் போராட்டம் மூலம் தமிழ் நாட்டில் மட்டுமே மில்கள் மூடிக்கிடப்பதுபோலவும், அதனைக் திறக்கக்கோருவது கம்யூனிஸ்டுக் கட்சி மட்டுமே என்பது போலவுமான கருத்துண்டாக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசு அண்மையில் தான் ஆறு மில்களைத் தன் பொறுப்பிலும் உதவியிலும் திறக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்து செய்தி வெளியிட்டிருக்கிறது. இந்தச் செய்தி மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆனுல் இந்தப் போராட்டத்தின் மூலம் அதன் முக்கியத்துவத்தைக் குறைத்து தான் அரசியல் லாபம் தேடிக்கொள்ள நினைத்திருக்கிறது. வலதுசாரிக் கட்சி இதே போன்றதொரு போராட்டத்தை மூடிக்கிடக்கும் பிற மாநிலங்களிலும் விரைவில் தொடங்குமா? என்பதை இனிமேல்தான் தெரிந்துகொள்ள வேண்டும்.

• • •

கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு கடைசியாக ‘மலபுரம் மாவட்டம்’ அமைக்க ஒப்புதலளிக்கும் முடிவுக்கு வந்துவிட்டதாகத் தெரிகிறது. சீரமைப்புப்பணிகளை விரைவாகத் தொடங்கவும் உத்திரவிட்டுவிட்டாராம். பெரும்பான்மையும் முஸ்லிம்களே அடங்கிய பகுதிதான் மலப்புரம் மாவட்டம் என்று கூறப்படுகிறது. இந்தக் கருத்து கருத்தரித்தபோதே நாடெங்கும் பரவலான எதிர்ப்புணர்ச்சிக் காட்டப்பட்டது. சமூகத்தின் அடிப்படையில் ஒவ்வொரு நாட்டிலும் பகுதிகள் பிரிக்கப்படுமாஞல் அது பல சமூக மக்களிடையேயும் ஒற்றுமையுணர்வை உண்டாக்குவதற்குப் பதிலாக பகை யுணர்ச்சியை வளர்க்கவே பயன்படும் என்று கருத்துரைக்கப்பட்டது அப்போது. எழுந்த எதிர்ப்பின் வேகம், பிரச்னையின் சூட்டை மெள்ளத் தணித்துக்கொண்டிருந்தது. ஆனுல் கேரள முதல்வர் என்ன செய்வார் பாவம்! அவர் நிலைமை அப்படி! தங்களுக்குள்ளேயும், தங்களிலிருந்து ஒரு பகுதியினருக்குள்ளேயும் உட்குழப்பங்கள் ஏற்பட்டு அமைச்சரவைக்கே அறைகூவலாக இருக்கின்றநிலைமை. பாவம், குஞ்சுகூட பதவி விலகி விட்டார்! அதன் எதிரொலிகள் வேறு நிலைமையை நெருக்கி இருக்கக்கூடும். இந்த விவகாரத்தில் இத்தனை அவசரம் காட்டப்பட்டிருப்பதற்குக் காரணம், அரசியல் நெருக்கடியாகத்தான் இருக்க முடியும். ‘நெருக்கடி’யென்று யேற்பட்டு விட்டால் ‘எதைச் செய்தாவது’ தலை தப்பிக் கொள்வது என்பது இயற்கைதானே!

முகப்பில்:

தாம்பரம் நகரமன்றத் தலைவர்
திரு. முனுஆதி, எம். எல். ஏ. அவர்கள்

அன்புள்ள ஆசிரியருக்கு,

‘காஞ்சி’ இதழ் காஞ்சிபுரத்திலிருந்து வெளிவருவதனுலேயே இதனை தங்கள் கவனத்துக்குத் கொண்டுவருகிறேன்.

காஞ்சி நகரம், சட்ட பூர்வமான குடும்பக்கார்டுகள் வழங்கப்பட்டிருக்கும் பகுதியாகும். இந்தக் கார்டுகளைக்கொண்டு முக்கியமாக சர்க்கரையும் அரிசியும் மட்டுமே பலபகுதிகளில் வழங்கப்படுகின்றன. அதிகாரம் பெற்ற சில கடைகளில் ரவை, மைதா முதலியனவும் கொடுக்கப் படுகிறது, ரவை, மைதா முதலியன சில கடைகளில் மட்டும் வழங்கப்படும்போது பலகடைகள்வழங்கப்படாமலே இருக்கிறது. இதற்கு யார் பொறுப்பு? அதிகாரிகளா? கடைக்காரர்களா?

அத்துடன் காஞ்சிபுரத்துக்கு குடும்பகார்டுகள் வழங்கப்பட்டு மூன்ருண்டுகளுக்குமேலே ஆகிறது. கார்டுகளில் ஓர் ஆண்டுக்கு மட்டுமே பதிவு செய்யக்கூடிய இடம் காணப்படுகிறது. இதில் மூன்ருண்டு கழித்திருக்கிருேம் நாங்கள்.

புதிய கார்டுகள் வழங்குவதில் தொடர்புடைய அதிகாரிகள் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. எப்போது சென்று கேட்டாலும் ‘ஃபாரம் கார்டு’கள் வந்து கணக்கெடுப்பார்கள்—அதன்பிறகு வழங்கப்படும் என்று பதில் மட்டுமே கிடைக்கிறது.

எனவே, இந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைத்து புதிய அட்டைகள் தரவும். கடைகளில் எல்லாப் பொருள்களும் கிடைக்கவுமான நிலையை அதிகாரிகள் ஏற்படுத்த வேண்டும். செய்வார்களா?

—எஸ். சுந்தரராசன்

...சிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால் காஞ்சிபுரம்-3...